உ

ஓம் ஸ்ரீ முருகன் துணை

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கந்த சஷ்டி சூரசம்ஹாரப் பாடல்கள்

செங்குந்தர் இளைஞர் சங்கம்

சிதம்பரம்.

முருகப் பெருமானின் போர்ப்படைத் தளபதிகள்
வீரபாகு உள்ளிட்ட செங்குந்த கைக்கோள நவவீரர்கள்
வீரதீர செங்குந்தர்
வீராந்தக செங்குந்தர்
வீரமார்த்தாண்ட செங்குந்தர்
வீரராகத்த செங்குந்தர்
வீரபாகு செங்குந்தர்
வீரகேசரி செங்குந்தர்
வீரமகேந்திர செங்குந்தர்
வீரமகேசுவர செங்குந்தர்
வீரபுராந்தக செங்குந்தர்
செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
78269 80901
உருவாக்கம் & வெளியீடு

P.T.K. தில்லைகோவிந்த செங்குந்தர் - வசந்தா அம்மாள்

வ.முருகேசன்
செங்குந்தர்

ஆ.இரத்தினசபாபதி
செங்குந்தர்

ப. துரைக்கண்ணு
செங்குந்தர்

செங்குந்தர் குல முன்னோடிகளான

இச்சான்றோர்களின் நினைவைப்போற்றி இந்நூல்

முருகப்பெருமானின் திருவடிகளில்

சமர்பிக்கப்படுகிறது.



சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் கந்தசஷ்டி,

ஆனித் திருமஞ்சனக் கொடியேற்றம்,

திருக்கார்த்திகை கம்பவிளக்கு தீபம்

ஆகிய உற்சவங்களையும் இன்னும் பற்பல

அறப்பணிகளையும் இயற்றி வருகின்ற

செங்குந்தர் குலச் செம்மல்

நாட்டாண்மைத் தலைவர்

திருமிகு. டாக்டர் ராஜ் நடராஜன் செங்குந்தர்

வாழ்வரசியார் திருமதி. சாந்தி ராஜ் நடராஜன்

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

சிதம்பரம் நகரில் செங்குந்தமரபினர் நிகழ்த்தும் கந்தசஷ்டி சூரசம்ஹார விழா பல்லாண்டுகளாகத் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது.

ஸ்ரீ சபாநாயகர் கோயில் எனப்பெறும் நடராஜர் கோயிலில் மேலைக் கோபுர வாயிலில் கிழக்கு நோக்கி எழுந்தருள் புரிகின்ற ஸ்ரீ செல்வ முத்துக்குமரப் பெருமான் கோயிலில் இவ்விழா நிகழ்த்தப் பெறுகின்றது.

சிதம்பரம் தெற்குத்தெரு செங்குந்தர் பரம்பரை நாட்டாண்மைத் தலைவர் தெய்வத்திரு. P.T.K.தில்லைகோவிந்த செங்குந்தர் அவர்கள் தலைமையிலும், பின்னர் அவர்தம் குமாரர் டாக்டர். தில்லைராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கள் தலைமையிலும், சிதம்பரம் தெற்குத் தெரு செங்குந்த மரபினர் பங்கேற்று இவ்விழாவைச் சீரோடும் சிறப்போடும் நடத்துகின்றனர். வடபகுதி செங்குந்தர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவை ஒட்டி நடக்கும் செங்குந்த நவவீரர் திருவீதிவலத்தின் போது முருகப்பெருமான் திருவருளையும் செங்கந்த நவவீரர் மாண்புகளையும் போற்றும் பாடல்கள் சொல்லப்பெறுகின்றன. பழைய நாட்டுப்புற நாடக பாணியில் அமைக்கப் பெற்ற இப்பாடல்கள் சொல்நயமும் பொருள் நயமும் மிக்கவை.

இப்பாடல்கள் பண்டைக்காலத்தில் வாய்-மொழியாகவே சொல்லவும் கேட்கவும் பெற்றன. அவற்றை எதிர்கால சந்ததியினரும் பயன்கொள்ளும் வகையில் நூலாக்கிட வேண்டும் என்ற எண்ணம் முருகப் பெருமான் அருளால் உதித்தது.

அந்நாளில் பெரியவர் திரு. நாராயண சாமி முதலியார் போன்ற பெருமக்கள் இதனை மெய்யன்போடு ஓதிவந்தனர். பின்னர் வடபகுதி செங்குந்தர் திருவாளர் முருகேச முதலியார், தென்பகுதி செங்குந்தர்கள், தெய்வத்திருவினர் அ.தில்லைச்சிதம்பரம், ஆ.இரத்தினசபாபதி, D.துரைக்கண்ணு, சேது மாதவன், D.கனகசபை, கந்தசாமி, முதலியோர் இதனை கையெழுத்துப் பிரதியாக வைத்திருந்து ஆண்டுதோறும் விழாக்காலத்தில் ஓதிவந்தனர்.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளிடம் அமரர் D.வீரப்ப செங்குந்தர் அவர்கள் இதனைப் படித்துக் காட்டிய போது, அவர்கள் இசையொழுங்கிற்கு ஏற்ப இதனைத் திருத்தியும், நாட்டு வழக்கில் அமைந்துள்ள பாடல்களைச் செய்யுள் வழக்கிற்கு ஏற்ப செப்பம் செய்தும் ஓதினால் நலம் விளையும் என்று ஆசி வழங்கினார்கள்.

அதன்பின் பலகாலம் இந்த ஏட்டுச் சுவடி எங்குள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. இறைவன் திருவருள் கூட்டுவிக்கக் காலம் கனிந்தபோது திருவாளர்கள் P.T.ஆறுமுகம், அ.விசுவநாதன்,பா.தி.ஜனார்த்தனன், க.தில்லைகோவிந்தன், மா.பன்னீர்செல்வம், S.குப்புசாமி, C.P.K.ஸ்ரீதரன் முதலியவர்களும் இவர்களோடு இணைந்து

செங்குந்த இளைஞர் சங்கத்து அன்பர்களும் நூலைக் கண்டறிந்து செப்பம் செய்ய முயன்றனர். இதனைச் செப்பம் செய்யும் பணி இறையருளால் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னோர் மொழிந்த மொழி பொருள் சிறப்புக்குன்றாத வகையிலும், செல்லரித்து விடுபட்டுப் போன சொற்களை இலக்கண வகையால் இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்ற யூகத்தின் அடிப்படையிலும் புதுக்கியுச் செம்மை செய்துள்ளேன். பழைய கம்பம் ஏறிப் பாடுகின்ற பாட்டின் இசைக்குப் பொருந்தும் வகையில் சில புதிய பாடல்களை செல்லமுத்துக்குமரப் பெருமான் உள்நின்று உணர்த்தப் புதிதாக எழுதி இணைத்துள்ளேன். இந்நூலை எழிலுற அச்சியற்றி வழங்கிய சிதம்பரம் ஜனகம் ஆப்செட் அச்சகத்தாரின் சீரிய பணி பெரிதும் பாராட்டுக்குரியது.

இந்நூல் வேழமங்கை, வேடமங்கை உடனாகிய ஸ்ரீ முத்துக்குமரப் பெருமான் திருவடித் தாமரைகளில் சமர்ப்பிக்கப் பெறுகிறது.

தமிழுலகும், சைவ நல்லுலகும் இதனை ஏற்றுப் போற்றிட அவனருளாலே அவன்தாள் வணங்கி மகிழ்கின்றேன்.

செங்குந்தர் இளைஞர் சங்கத்து
ஆணையின் வண்ணம்

சிதம்பரம். தி.பொன்னம்பலம்

உ

ஓம் ஸ்ரீ முருகன் துணை

கந்த சஷ்டி சூரசம்ஹாரப் பாடல்கள்

***

1

சிவக்ஷேத்திர மாகிய தில்லைநகர் தன்னிலே
சிறப்புடன் வாழ்கின்ற செங்குந்தமான பெரியோர்
சீர்புகழ் தில்லையில் தெற்குவீதி தன்னிலே
சூரசம்ஹாரம் உண்டு
நவவீரர் ஒன்பது பேர்களையும் சோடித்து
நகரமெல்லாம் கிடுகிடு எனவே
நடன கேளிக்கையும் உபய வெண்சாமரம்
நகநகென மத்தாப்பூ தீவர்த்தியும்
பொதுவான கடைவீதி தன்னிலே செங்குந்தமுதலிமார்
பெருமையுடன் வந்த பெரியோர்
அவருடைய விருதுகள் அசபசக்கரக் கொடி
நீள் அரசு கோழிக்கொடி
நெடியமலை வெள்ளித் தண்டை தவள வெள்ளாடையும்
தவவேடம் பெற்ற பெரியோர்
மேல்நாடு கீழ்நாடு தென்னாடு வடநாடு
எங்கிந்த செங்குந்தமே

௨

வஜ்ஜிர பாகுவைக் கொன்று அவன் முதுகு எலும்பைப்
பிடுங்கி வாகுடன் கம்பமாக்கி
வலியதாம் நரம்பினைக் கயிறாகக் கட்டியே
வீறுடன் அதில் ஏறியே
வடிநெசவம் வாழ் காஞ்சி ஏகாம்பர நாதருடன்
வடிவம் தரித்த பெரியோர்
வண்மை பெரும் காமாட்சி அம்மை தன்
பாதச் சிலம்பில் உதித்த பெரியோர்
பெருமை பெறும் தாரணி முருகர் சகோதரர்
நவவீரர் வாள் பிடித்தோம்
பேர் பெற்ற பகவான் முதலியார் தெருவினில் புகழுடன்
பெருமையாய் வாழும் பெரியோர்
வீராதி வீரரும் விபூதி ருத்திராக்ஷமும்
முன்மாலை தரித்து வந்தோம்
மேல்நாடு கீழ்நாடு தென்னாடு வடநாடு
எங்கிந்த செங்குந்தமே

3

சரவணப் பொய்கையில் சண்முகம் உருவாகி
தாண்டவம் ஆடும் குமரா
சக்திவேல் வாங்கவே முத்துக்குமரனாய்
தான் ஆகி நின்ற குமரா
கொடியதொரு சூரனைக் கொத்தி பிளக்கவே
ஞானவேல் தொட்ட குமரா
குக்குடத்து வசமாய் பச்சைமயில் ஏறியே
கொஞ்சி விளையாடும் குமரா
திருமருவு செங்கண்மால் அன்பான மருகனே
தேவர்கள் தொழும் பாதாம்புஜா
தேவர்கோன் மகளான தெய்வயானை பாகனாய்
செழிப்புடன் அமர்ந்த குமரா
அரனுடைய விழியினில் வரும் குரு உபதேசனே
அடியார் வினை பொடியாக்கவே
நித்தமாய் திருத்தணிகை சொந்தமாய்
வாழ்கின்ற ஆறுமுக வடிவேலனே

4

மாமேவு நவரத்தின கேயூர மணிமகுட
மன்னிப் பொலிந்த முடியும்
வச்சிர நுதத்திலகு வெண்ணீறும் ஓர்ஆறு
வதன பிம்பத்தின் அழகும்
பாமேவு பக்தர்க்கு மடைதிறந்தன்ன பொழி
பன்னிரு விழிக் கருணையும்
பகர் அரிய பழமறை பழுத்து ஒழுகு சிறுநகை
பவளம் சிறந்த வாயும்
காமேவு கரகமலை பந்தியும் சேவலும்
கனக மயிலும் கிண்கிணியுமங்
கோலும் முன்நூலும் வடிவேலும் மென்மேலும்
எக்காலும் துலங்க வருவாய்
தாமோ தரானந்த கோவிந்த வைகுந்த
சரச கோபாலன் மருகா
சதுர் மறைகளே தந்த பரம குருவாய் வந்த
சரவண பவானந்தனே

5

பூமிக்கு ஓர்ஆறு தலையாய் வந்து சரவணப்
பொய்கை தனில் விளையாடியும்
புனிதர்க்கு மந்திர உபதேசமொழி சொல்லியும்
போதனை சிறையில் வைத்தும்
தேமிக்க அரிகரப் பிரமாதி கட்கும்
ஜெயிக்க முடியாத அசுரனை
தேகம் கிழித்து வடிவேலினால் இருகூறுசெய்து
அமரர் சிறை தவிர்த்தும்
நோக்கும் அன்பர் இடர்வுற்ற சமயந்தன்னில்
நினைக்க முன்வந்து உதவியும்
நிதமும் மெய்துணையாய் விளங்கலால் உனக்கு
நிகரான தெய்வம் உண்டோ
மாமிக்க தேன்பெருகு பூங்கடம்பு அணியும்
மணிமார்பன் வள்ளி கணவா
மயில்ஏறி விளையாடும் குகனே
புல்வயல் நீடு மலைமேவும் குமரேசனே

6

சேவலங் கொடியாட மயில்கொடி யனுமக்கொடி
சித்திரக் கொடி பறக்கவே
சிங்கக்கொடி யாளிக்கொடி புலிதண்டை பாவாடை
செழுங்கருணை கொடி ஆடவே
பாவலர் புகழ்ந்திட பகல்வர்த்தி வெண்காமரம்
பக்க வாத்தியங்கள் முழங்கவே
பாங்காகவே இன்னும் கிரவுஞ்சகிரி ஏகி
அங்க தாருகன் உயிர் வதைப்போம்
யாவரானாலும் முகம் எதிர் வசனமறியாமல்
அமர் செய்யத் தகாதண்டவே
ஆறுமுகம் சொல்லவே ஆகாய மார்க்கமாய்
அவனுடன் எதிரில் நிற்போம்
சாகாத கெஜமுகனே சண்டைக்கு வந்தாலும்
அவனையும் சடுதியில் தலை அறுப்போம்
தர்க்கமிடும் சூரனை வாளினால் வென்றுவரும்
சமர்த்துள்ள வீர பாகுவே!

7

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
    பாடகம் தண்டை கொலுசும்
பச்சை வைடூரியம் இச்சையாய் இழைத்திட்ட
    பாதச் சிலம்பின் ஒலியும்
முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும்
    மோகன மாலை அழகும்
முழுதும் வைடூரியம் புஷ்பராகத்தினால்
    முடித்திட்ட திருத்தாலி அழகும்
சித்திரக் கலைபொலியும் சிற்றிடை மேகலையும்
    செங்கையில் பொன் கங்கணமும்
செகமெல்லாம் விலைபெற்ற முகம் எல்லாம் ஒளிஉற்ற
    சிறுகாது கொப்பின் அழகும்
அத்திவரதன் தங்கை சக்தி சிவரூபத்தை
    அடியேனால் சொல்லுந் தரமோ
அழகான தில்லையில் புகழாக வாழ்ந்திடும்
    அம்மை சிவகாமி உமையே

8

மணமாலை அருமையைப் புனைபவர்களே அறிவர்
மட்டிக் குரங்குகள் அறியுமோ
மக்களுடைய அருமையை பெற்றவர்களே அறிவர்
மலடிதான் அறிவது உண்டோ
கணவருடைய அருமையை கற்புடைமாதர் அறிவர்
கணிகை ஆனவள் அறிவளோ
கருதுமொரு சந்தியின் பாண்டம் என்பதை வரும்
களவான நாயும் அறியுமோ
குணமான கிளிஅருமை தனைவளர்த்தவர் அறிவர்
கொடிய பூனையும் அறியுமோ
குலவு பெரியோர்கள் அருமையை நல்லோர் அறிவர்
கொடுமூடர் தாம் அறிவரோ
மணவாளன் நீயென்ற குலவள்ளி
பின்தொடரமனக்கோயில் கொண்ட அழகா
மயிலேறி விளையாடு குகனே புல்வயல்நீடு
மலைமேவும் குமரேசனே

9

ஓராறு முகம்ஆட ஈராறு புஜம்ஆட

ஓங்கு வடிவேலும் ஆட

உச்சித குண்டலம் கச்சித முடிஆட

ஒளியான சுட்டி ஆட

பாரான தண்டையும் பாத சிலம்புமாட

பணிந்திடும் பக்தர் ஆட

பன்னிருகரம் ஆட பணித்த பூஷணம் ஆட

பவுரி வெண்குடைகள் ஆட

சீராரும் தென்திசைக் கோபுர உச்சியில்

செங்குந்தர் கொடி ஆடஆட

தொண்டர்கள் முதலான சண்டிகேஸ்வரர் ஆட

தொந்த நவவீரர்கள் ஆட

தாராரும் தவமுனிவர் தனித்துவசம் ஆட

தமியேன் முன் ஆடிவருவாய்

தகதகென மயில்ஏறி திருநடனம் ஆடிவரும்

தணிகா சலக் கடவுளே

10

விடையேறி வருகின்ற விமலனார் மடிமீதில்
விளையாடி வளர்ந்த குமரா
வினை செய்யும் அசுரனையும் சம்ஹாரம் செய்யவே
வெற்றிவேல் தொட்ட குமரா
கடல்தனில் அறிதுயிலும் கரியமால் மருகனே
காமாட்சி பெற்ற குமரா
கலைமகள் கணவனாம் வேதனை சிறைதனில்
கருத்துடன் வைத்த குமரா
அடைவுடன் வேடனாய் வேங்கை மரமாய் நின்று
ஆண்டியாய் வந்த குமரா
ஆறுமுக மாகவே மயில்மீதில் ஏறியே
அருளவே வந்த குமரா
அரனுடைய விழியினில் வரும்குரு உபதேசனே
அடியார் வினை பொடிஆக்கவே
நித்தமாய் திருத்தணிகை சொந்தமாய் வாழ்கின்ற
ஆறுமுக வடி வேலனே

11

அம்புவி தன்னிலே இன்பமுடன் முடிபெற்று

ஆண்டவனும் நீ தானடா

அருமைஉள்ள தேவரை சிறைதனில் வைக்கவே

நீ ஆணவம் கொண்டாயடா

கெம்பீரமாகவே உனக்கு ஒருவர் எதிர்இல்லை

என்று நீ எண்ணாதேடா

கேளடா இனிஉன்னை வேலுக்க இரையாக்கிவே

கெடுங்காலம் இது தானடா

வம்புகள் பேசியே வானவரை சிறைவைத்த

வகைஎன்ன பதில் சொல்லடா

சாம்பசிவன் அருளினால் எந்தனுக்கே ஜெயமடா

இக் கணம் வெல்வோமடா

சண்டாள ராட்சசனே உனைகொண்டாடி வெல்லுவோம்

சமர் செய்யடா சூரபதுமனே

12

தட்டு சல்லடம் கச்சை பட்டு பீதாம்பரம்
தலைதனில் மௌலி வைத்து
தாளடியிலே சிலம்பாட கண்டாமணி
தகதக எனவே துலங்க
மட்டில்லா ஆபரணங்கள் பூட்டியே மார்பினில்
மகர கண்டிகை ஜொலிக்க
மாணிக்க தண்டியில் இருமலைகள் மாட்டியே
மண்டி இட்டே நடக்க
அஷ்டகஜெம் வீரிட்டு தட்டுத்டு மாறிட
அன்பு கொண்டே நடந்தோம்
எட்டிஅடி வைத்து ஆனந்த நடனம் ஆடிவரும்
என்ஆனந்த சிவசுப்ரமணிய கடவுளே

13

சுந்தரி சவுந்தரி நிரந்தரி புரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிர வாரத்தில் உனைக்கண்டு தரிசித்தோர்
படுதுயர் நீக்கி விடுவாய்
சிந்தைதனில் உன்பதம் தன்னையே தொழுதவர்கள்
ஜென்மவினை மாற்றி விடுவாய்
சொந்தமாய் உன்மைந்தனாம் எந்தனை ரட்சிக்கும்
சிறிய கடன் உன்னது அம்மா
சிவசிவ மகேஸ்வரி பரமனிட ஈஸ்வரி
சிரோண்மணி மனோன்மணியும் நீயே
அந்தரி துரந்தரி நிரந்தரி பரம்பரி
அனாதை ரட்சகியும் நீயே
அழகான தில்லையில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை சிவகாமி உமையே

* * *

ஆனந்த நடனமும் காண்கின்ற கோவிந்த
ஆலய அலங் காரமும்
காண்பரிய அரிபிரம்மா முதலான பேர்களும்
கைதொழுது நின்ற அழகும்
உமைகண்டு தரிசித்தோர் முக்திபெற்று
உலவுவோர் அக்காசியிலும் வேறு உள்ளதோ
கதிர்வாணர் சதுர்வேதர் சகலரும் போற்றிடும்
கனகசபை ஆடும் மூர்த்தி
நெசவாளர் செங்குந்தர் நவவீரர் போற்றிடும்
நிருத்தமிடும் நடராஜரே

14

சீர்புகழும் தில்லையில் தென்திசை நோக்கியே
திருநடனம் ஆடும் அப்பன்
செகமெலாம் துதிக்கின்ற கருணையங் கடலமுதின்
சிறப்பினைச் சொல்லல் ஆமோ
பார்புகழும் மேருவென நாற்றிசைக் கோபுரம்
பரங் கருணை முக்குறுணியும்
பதிமருவு குமரகோட்டம் சிவகங்கைத் தீர்த்தமும்
பாண்டியர் பரம நாயகனும்
ஏர்திகழும் சிவகாம கோட்டமொடு எம்பிரான்
எழுந்தருளும் ராஜ சபையும்
தேவநல் சபையோடு நிருத்தமண் டபமும்
திருமூல நாதன் அருளும்
நேர்கொண்ட கற்பகம் நாடியே தொழுதிட்டோம்
நடனமிடும் அம்மை யப்பா
நவவீரர் சூழவரு அஜவாகனர்க்கு இவண்
நல்குவாய் வெற்றி வேலே

15

அற்புதத் தெய்வமிது ஆடுகின்ற சிதம்பரத்தில்
அணிந்தநவ வீரர் வந்தோம்
அணியணியாய் விருதுகள் அழகான தோரணம்
அகமெல்லாம் பூர்ண கும்பம்
சிற்பரன் எம்பிரான் தட்சனின் யாகத்தைச்
செகுத்திட்ட சிவவீர பத்திரர்
வெல்லப்பிறந்த முதலியார் தெருவிலே
வீறுடன் வலமாய் வந்தோம்
நற்பதப் பொருளான் செங்குந்தம் பிள்ளையார்
நற்தச்சங் குளத்து மாரி
நவராத்ரி காமாட்சி நற்கருணை செல்லியம்மை
நவவீரர் போற்றி வந்தோம்
பொற்புறு வீரனார் விழல்கட்டி விநாயகர்
போற்றியே வணங்கி வந்தோம்
பொன்னம்பலத்து வளர் சிவகாமி நாயக
அருளிடுக வெற்றி வேலே

16

அந்தகனின் கண்ணொளியில் சந்திரனும் சூரியனும்
வந்தவழி எந்த வழியோ
அங்கமது பங்கமுறும் சிங்கமதின் நெஞ்சுறுதி
பொங்குவது என்ன விதியோ
தந்தியறுந் தோடியபின் கைவிரல்கள் மீட்டவரும்
சங்கீதம் உந்தன் நிதியோ
தாய்மடியில் ஆடுகையில் வாய்நிறையப் பூங்கவிதை
தந்தவள் என்தெய்வம் இலையோ
சிந்திவரு மைத்துளியில் சிந்துபயில் கின்றஎனை
சிங்காரம் செய்த கிளியே
தென்னைபனை மாவளரும் தில்லைநகர் மேவுகின்ற
செல்லியம்மை அரசி உமையே

17

நல்லறிவை உந்தனருள் தந்ததென எண்ணாது
நாத்திகம் பேசி நின்றேன்
நடைபயிலும் சிறுவனொரு கடைவதைத்த பாவனையில்
நாற்புறமும் முழக்கி வந்தேன்
கல்வியறி வற்றவொரு பிள்ளையிடம் நீதந்த
கடலையும் வற்று விட்டேன்
கருணை முகிலே நினது நினைவு வரக்கண்தன்பின்
கடலையும் மீறி நின்றேன்
செல்வம் வருமாயின் ஒருதிருக்கோயில் கட்டியுனை
சேவிப்பேன் வண்ண மயிலே
தென்னைபனை மாவளரும் தில்லைநகர் மேவுகின்ற
செல்லியம்மை அரசி உமையே

18

செந்நெல்வயல் சூழ்ந்த தில்லைச் சிதம்பரத்தில்
சிவனடியார்நடுவே சேர்ந்துள்ள பெரியோர்
செங்குந்த முதலிமார் கூடிமிக ஐந்துநாள்
திருவிழா செய்த பின்பு
நன்னயம் அதாகவே சிதம்பரம் தன்னிலே
நாட்டாண்மை வீட்டிலே தான்
நவரத்தின சொரூபமாய் ஸ்வர்ணமுடி சூட்டியே
நகரமது வலம் வருகையில்
வர்ணமயில் கோழிக்கொடி அனுமக்கொடி கருடக்கொடி
வரிசையாய் பதினெட்டு விருதுகள்
பாங்காய் உடல்பேரிகை பகல்வர்த்தி வெண்சாமரம்
பக்கவாத்தியங்கள் முழங்கவே
பாங்காகவே வந்து கிரவுஞ்சகிரி ஏகி
அங்கு தாருகன் உயிர் வதைப்போம்
யாவரானாலும் முகம் எதிர்வசன மறியாமல்
அமர்செய்யத் தகா தண்டவே
ஆறுமுகம் சொல்லவே ஆகாய மார்க்கமாய்
அவனுடன் எதிரில் நிற்போம்
அங்கு சாகாத கஜமுகன் சண்டைக்க வந்தாலும்
அவனையும் சடுதியில் தலையறுப்போம்
தர்க்கமிடும் சூரனை வாளினால் வென்றுவரும்
சமர்த்துள்ள நவ வீரரே

19

வாழ்கின்ற தில்லைநகர் வாழையடி வாழையாய்

வாழ்ந்திடும் மேற்கு வாயில்

வரிசையாய் கடைகளும் வண்டிகள் இயங்கிடும்

சுவர்ணநதி போகும் சாலைஅங்கு

கரிமுகனை விளங்கு குமரேசனையும்

வரிசையாய் நானும் கண்டேன்

வாலப்பிராயமும் எதிர்இட்ட பார்வையும் பக்கத்தில்

வள்ளி தெய்வயானை கண்டேன்

அவர்வர்ண மயில்ஏறியே வடிவேல் பிடித்துமே

வரமது தரவும் கண்டேன்

வெள்ளிமலை யோகனே பழனிமலை வாசனே

சிவகாமி பெற்ற மகனே

வண்மையுடன் அடியேன் நினைத்தவரம் தருவாய்

வள்ளி தெய்வயானை உடனே

முத்துக் குமரனாய் வளர்தில்லை பதிவாழும்

சிவ சுப்ரமணியக் கடவுளே

ஸ்ரீ தில்லைக் காளியம்மன் பதிகம்

20

சீராரும் பச்சைக் கலாப மயிலே சிவச்
செம்மலார் மகிழு மயிலே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
தேமரு பசுங் கிள்ளையே
காராரும் உருநீல வண்ணக் களஞ்சியக்
கண்ணற்கு மினியதங்காய்
கன்னலே கவின்மேவு மின்னலே என்னுமிடை
காட்டிமுன் நாட்டியத்தைப்
பாராரு மக்களொடு வானாடர் புக்குநனி
பார்த்திட நடித்த பாவாய்
பண்ணுலவு பைந்தமிழ் உண்ணிலவு மென்மொழிப்
பாவையர்கள் வாழும் பதி
தேராரு வீதியொடு தேனாறு சோலைசூழ்
தெய்வச் சிதம்பர மெனும்
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைம காளி உமையே

21

பச்சைக் குகந்தஎழில் மரகதத் தெபாளியுமெண்
பக்கங் களும் சூழ்ந்திட
பழகுகுழல் ஓசைபயில் பானாறு தேனாறு
பைங்குமுத வாயு மாட
இச்சைக் குகந்தசிலை என்னுநுத லாடஉல
கெங்கனும் அதிர்ந்தாடிட
இகல்விழியின் மகரமும் அம்மகரமே பொருளும்
இருமரகமும் ஆடிட
விச்சைக் குகந்தவுயர் வித்தகீ நீயாடி
விண்ணொடுமண் ஆட வைத்தாய்
வேதமொடும் ஆகமம் வேண்டிப் பணிந்திடும்
விஞ்ஞான வான மயிலே
செச்சைக் குகந்தநற் செந்தா மரைகள்மலி
சீர்கழனி சூழும் பதி
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே

22

அள்ளக் குறைந்திடா வள்ளத் தமிழ்தமாம்
அன்னையே நின்னை நாளும்
அண்டிப் பிழைத்திடா தண்டத்துள் வாழ்பவர்
அஞ்சிப் பிழைப்பர் அந்தோ
கள்ளக் குணத்தினேன் உள்ளத்து மாசுளேன்
காமக் குளத்தில் ஆழ்வேன்
கையைப் பொருத்தியும் உன்காலைப் பிடித்தும்உயர்
கரையேற இது போழ்துமென
உள்ளக் கருத்தினைக் கள்ளிற் சிறந்தமிழ்
ஒண்கவியி னாலுரைத்தேன்
உத்தமத் தொண்டர்பலர் தத்தமக் குற்றவகை
ஓதிப் பணிந்து பாட
தெள்ளத் தெளிந்த அமிழ்தென்னத் தகுந்தமிழ்
தித்திக்கும் முத்திப்பதி
தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்
தில்லைமா காளி உமையே

23

கிளையாடு நின்திருக் கேசபா ரத்தினோடு

கிளர்சேவ லங்களாட

கிழித்தெழு சுடர்பரிதி என்னுமணி நூபுரம்

கிண்கிணென ஆடநின்கை

வளையாட இருகுங்கு மக்குன்றெச்சொல் முலை

வரைகளவை ஆட ஆட

வன்மையுற நீயாடி வள்ளலார் உடன்ஆடி

வானொடு மண்உலகம் ஆட

விளையாடு நங்கையே விண்ணாடு வித்தகீ

வினையாடி யொழிய அருளாய்

வீறிட்டழுமுயிர்கள் தேறிட்டெழுந்துயர

வேண்டிக் கனிந்தருளுவாய்

திளையாத தெள்ளமுது வரையாது தந்தெனது

ஜென்மசா பல்யம் அருள்வாய்

தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்

தில்லைமா காளி உமையே

24

வெங்கொடும் அரக்கர்தமை வெட்டிக் குடித்தவர்தம்

வீரப் பெருங் கருதியை

வீரிட்டெழுந் துலகு கூரிட்டலர்ந் தழிய

வெய்யநடம் ஆடி நீமுன்

எங்கணமே மக்கட்குழாம் இரிந்தோட அவர்

என்றனக் கேற்ற ஊண் என்(று)

இச்சை வைத்தாய் அவர்தம் பச்சையூண் தன்னிலே

எங்கள் வேற் காளியம்மே

அங்கவர் தமைக்கூடி ஆதரவு தந்துலகும்

அழியாத வண்ணம் அரனார்

ஆர்த்தமர் காணநல ஊர்த்துவ நடம்ஆடி

அம்மைநின் வெம்மை தீர்த்தார்

திங்களுறு நல்வதன மங்கையர்கள் எங்குமலி

தெய்வத் திருப்பதி யதாம்

தில்லைத் தலத்தருகில் எல்லைப் புறத்திலமர்

தில்லைமா காளி உமையே

25

சிவகாம வல்லியின் பாதச் சிலம்பிலே
சிதறிட்ட மணியின் பெண்கள்
நவவீரர் ஒன்பது வீராதி வீரரை
நடராசர் அருளால் பெற்றார்
மாணிக்க வீரபாகு மரகதமார்த் தாண்டரொடு
மணிநீல வீர தீரர்
அணிமுத்து நித்திலக் கேசரி வீரரென
அணிவகுக்கும் தேவர் சேனை
செம்மையொளி பவளத்தின் வீரமிகு அந்தகர்
செங்குந்தர் சிவனின் மைந்தர்
நன்மைபெறு மகேச்சுரர் கோமேதகச் செல்வர்
ஒளிருவாள் புட்ப ராகம்
மதிவீர மகேந்திரர் வைரத்தின் ராக்கதர்
வைடூர்ய புரந்தர ரெல்லாம்
அதிதீர வீரராய் அறுமுகன் தம்பியாய்
அதிரவரு செங்குந்த மே!

26

மூவாயிரம் முனிவர் முறையாலே பூசிக்கும்
முத்தமிழ்க் குமர தேவே!
தேவாதி தேவர் போற்றித் துதிக்கின்ற
தெய்வசிகா மணிக் கடவுளே!

பாவாணர் செங்குந்தர் வாழ்முதல் ஆகியே
பாலிக்கும் முத்தி முதலே!
தேவமயில் அசுரமயில் இரண்டும் முன்நிற்கவே
தில்லைச் சிதம்பரத் தில்

மேவுமுயர் மேற்றிசைத் கோபுரம் தன்னில்வளர்
முத்துக் குமரக் கடவுளே!
பாவாளும் கலைவாணி நாயகன் பிரமனை
பாங்குடன் சிறையில் வைத்தோய்

சேவலங் கொடியாட வள்ளிதெய் வானையொடு
செங்குந்த வீரர் சூழ
கோவிலது எடுத்திட்ட தண்டபாணி போற்றி மகிழ்
குமர சிவ சரவண! முருகனே!

* * *

27

ஆனைமுகம் ஐந்தோடு அருள்தனைப் புரியவே
அரிமாமேல் அமர்ந் திருக்கும்
ஏரம்ப கணபதியின் இருதாள்கள் போற்றினோம்
எங்கள் குல தேவ தேவே!

தேமதுரத் தமிழோசை தெவிட்டாத சந்தமாய்
திருப்புகழ் தந்த மேலோன்
நாமமது அருணகிரி நம்பனையும் அன்புடன்
நாவாரத் துதித்து வந்தோம்

வேழமங்கை தன்னொடு வேடமங்கை யுடனாக
வேலனாய் மயிலில் வந்தோய்
ஈரிரண்டு நால்வரென திருவாயிற் காவலர்
இங்குதான் நாங்கள் கண்டோம்

அருமையாயம் தமிழிலே திருப்புகழ் விரிவுரை
அமுதமெனத் தந்த மேலோன்
திருமுருக கிருபானந்த வாரியாம் குருநாதர்
துதித்திடும் குமர வேளே!

* * *

ஜனகம் ஆப்செட், சிதம்பரம். போன் : 221509